[15th March 1966

திரு. ஆ. தங்கவேலு : திருச்சி பெரியார் பயிற்சிப் பள்ளியில் மாணவர்களிடமிருந்து ரூ. 500 நன்கொடை வசூல் செய்யப்படுவதாக அரசாங்கத்திற்கு ஏதாவது புகார் வந்திருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எந்தப் பள்ளி மீது புகார் வந்திருக்கிறது என்பதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : இந்த நன்கொடை அவசியம் கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்துவதன் காரணத்தினால் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் பள்ளியில் சேர முடியாமல் இருக்கிறது. அதை நீக்குவதற்கு அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவிகள் சேர்த்துக்கொள்ளப்படவில்லை என்று அங்கத்தினர் அவர்கள் கூறுகிறார்கள். இனி புதியதாகப் பள்ளிகள் அமைக்கப் படுவதில்லை. தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவிகள் சேர்த்துக் கொள்ளப்பட முடியாத நிலையில் இருந்தால், அரசாங்கமே பயிற்சிப் பள்ளிகளை தொடங்கி நடத்தவேண்டும் என்று கருதுகிறோம்.

Private Educational Institutions

* 296 *Q.*—SRI V. SANKARAN :
SRI S. MADHAVAN : } Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the Union Government have asked the State Government to enact legislation to control and regulate the working of private educational institutions in the State; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) The Government of India have forwarded a copy of a model Bill for the regulation and control of private educational institutions, for consideration and necessary action. The scope of the model Bill is limited only to those unrecognised educational institutions which claim to prepare students for recognised degrees, diplomas and certificates.

திரு. செ. மாதவன் : தனியார் நடத்தக்கூடிய பள்ளி நிறுவனங்களிலே ஊழல்கள் நடைபெற்றால், அதைத் தடுப்பதற்கு இந்த சட்டத்தில் இடம் இருக்குமா அல்லது கல்வித் திட்டங்களை மட்டும் பரிசீலிப்பதற்கு இந்தச் சட்டத்தில் இடம் இருக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முக்கியமாகப் பல்கலைக் கழகங்கள் அங்கிகாரம் இல்லாமலேயே பள்ளிகள் நடத்தி டிக்ரி கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அம்மாதிரி பிரைவேட் காலேஜ்கள் சரியான வகையிலே நடத்தப்படுவதற்கு வகை செய்வதற்கு அவர்கள் அனுப்பியது இந்த மாடல் மசோதா.

15th March 1966]

திரு. சா. கணேசன் : அப்படியானல் இந்த மாடல் மசோதாவின் நோக்கம் தனியார்கள் நடத்துகிற கவர்ன்மெண்டு கிராண்டு வாங்காத அந்தப் பள்ளிகளின் நடைமுறையை சீர்திருத்துவதற்கு மட்டும் தானு? அல்லது கிராண்டு வாங்குகிற பள்ளிகளுக்கும் விஸ்தரிக்க முடியுமா? முடியுமானல் அதைச் செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மத்திய அரசாங்கம் அனுப்பிய மசோதாவின் நோக்கம் அதுதான். இது அரசாங்கத்தின் டைரக்டரிடம் இப்பொழுது பரிசிலனையில் இருக்கிறது. இதை எப்படி மாற்றி நாம் சட்டம் செய்யவேண்டியிருக்கும் என்பதெல்லாம் இப்பொழுது பரிசிலனை செய்யப்பட்டு வருகிறது.

திரு. வை. சங்கரன் : நம்முடைய ராஜ்யத்தில் இது போன்ற 'அன்ரெகக்னைஸ்டு' பள்ளிகள் குறிப்பாக டெக்னிகல் எஜுகேஷன் சம்பந்தப்பட்ட பள்ளிகள் இருக்கின்றன. அவை என்னென்ன பள்ளிகள் என்று சொல்ல முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எனக்குத் தெரிந்தவரையிலே தகவல் ஒன்றும் என்னிடம் இல்லை.

திரு. செ. மாதவன் : இம்மாதிரி சட்ட சம்பந்தமான கருத்துக்களை மட்டும் மத்திய சர்க்கார் தெரிவித்திருக்கிறதா? அல்லது இம்மாதிரி சட்டத்தை மத்திய சர்க்கார் உருவாக்கிக் கொடுத்திருக்கிருர்களா? அல்லது மாநில சர்க்காரால் உருவாக்கப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த மாதிரி மசோதாவை மத்திய சர்க்கார் தயார் செய்து மாநில அரசாங்கத்தின் பரிசிலனைக்கு அனுப்பியிருக்கிருர்கள். வேண்டுமானல் அதை நாம் ஏற்றுக்கொள்ளலாம். இந்த மாநில அரசாங்கம்தான் சட்டம் செய்யவேண்டும். சட்டம் செய்பவர்கள் நாம் தான். அதை அப்படியே ஏற்றுக்கொள்ளுவதா அல்லது மாற்றி அமைத்துச் சட்டம் செய்வதா என்பதைப்பற்றியெல்லாம் இந்த அரசாங்கம் பரிசிலனை செய்யும்.

திரு. ஜே. மாதா கவுடர் : சில தனிப்பட்டவர்கள் மருத்துவத் துறையில் பள்ளிகள் நடத்தி டிப்ளமோ கொடுக்கிருர்கள். அதைப் பற்றியும் பரிசிலனை செய்யப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அம்மாதிரி மருத்துவ பள்ளிகள், மருத்துவ ஸ்தாபனங்கள் இங்கே இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

திரு. வை. சங்கரன் : 'அன்-ரெகக்னைஸ்டு' பள்ளிகள், இன்ஸ்டிட்யூஷன்ஸ் சம்பந்தமான நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கு, ஒழுங்குபடுத்துவதற்கு இந்த மாடல் லெஜிஸ்லெஷனுல் என்ன ப்ரொவிஷன் இருக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ரெகுலேட் செய்வதுதான் நோக்கம். தனிப்பட்டவர்கள் நடத்தக்கூடிய ஸ்தாபனங்கள்

ஒழுங்காக நடக்கவேண்டும், அவற்றில் தவறுகள் ஏற்படக் கூடாது, அவற்றை எப்படி ரெகுலேட் செய்வது என்பதுதான் இந்த மசோதாவின் கருத்து.

பயிற்சிப் பள்ளிகள்

*297 கேள்வி—திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டத்தில் உள்ள அரசினர் ஆதாரப் பயிற்சிப் பள்ளிக்குச் சேர 1965-66-ம் ஆண்டில் எத்தனை மாணவர் களிடமிருந்து விண்ணப்பங்கள் வந்தன, தாலுகாவாரியாக ?

(இ) அவர்களில், தாலுகாவாரியாக சேர்த்துக் கொள்ளப் பட்டவர்களின் எண்ணிக்கை என்ன ?

(உ) மேற்படி பள்ளியில் மேலும் இடங்களை அதிகரிக்கும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கின்றதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: (அ) & (இ) இது குறித்து சபைமுன் விவர அறிக்கை[a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

(உ) வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள அரசாங்கப் பயிற்சிப் பள்ளிகள் அனைத்திலும் சாதாரணமாக ஒரு பிரிவில் 40 பேர்தான் சேர்த்துக்கொள்ளப்படுவர். ஆனால், 1965-66-ல் 45 பேரைச் சேர்த்துக் கொள்ளும்படி உயர்நிலைக் கல்வி நெறியாளர் அனுமதி வழங்கியுள்ளார்.

புலவர் கா. கோவிந்தன்: தலைவர் அவர்களே, தாலுகா வாரியாக கொடுக்கப்பட்டிருக்கும் கணக்கில், ஒரு தாலுகாவில் 44 மாணவர்களும், ஒரு தாலுகாவில் 18 மாணவர்களும் என்று வித்தியாசம் இருக்கிறது. பெண்கள் எண்ணிக்கையைப் பார்த் தால், ஒரு தாலுகாவில் 32 என்றும், இன்னொரு தாலுகாவில் 2 என்றும் வித்தியாசம் இருக்கிறது. வந்த மனுக்களில் இத்தனை என்று தேர்ந்தெடுக்கப்பட்டதா அல்லது தாலுகாவிற்கு இத்தனை என்று தேர்ந்தெடுக்கப்பட்டதா ? எந்த அடிப்படையில் தேர்ந் தெடுக்கப்பட்டது என்று அறியலாமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பொதுவாக எல்லாத் தாலு காக்களிலும் பரவலாக இருக்க வேண்டும் என்பதுதான் அரசாங் கத்தின் நோக்கம். தாலுகாவிலிருந்து எவ்வளவு மனுக்கள் வந்தன, தாலுகாவின் தேவை என்ன என்பதையெல்லாம் பார்த்து செலெக்ஷன் செய்யப்படுகிறது. இந்த ஜாபிதாவில் காணப்படும் கணக்குப்படி, அவ்வளவு பேரும் எல்லாத் தாலுகாக்களிலும் இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

---

a 339-ம் பக்கங்களில முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.